**FAQ-கள் (அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்)**

## Title VI என்பது என்ன?

1964-ஆம் ஆண்டின் குடிமை உரிமைகள் சட்டத்தின் (Civil Rights Act) Title VI என்பது திட்டங்களில், சேவைகளில், அல்லது கூட்டாட்சி அரசின் உதவியைப் பெறும் நடவடிக்கைகளில் இனம், நிறம் அல்லது பிறந்த நாட்டின் அடிப்படையில் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் ஒரு கூட்டாட்சி அரசு ஒழுங்குமுறையாகும்.

## Title VI-இன் கீழ் யார் பாதுகாக்கப்படுகிறார்கள்?

பயணிகளும் SamTrans-இன் சேவைகளை அணுகும் வாடிக்கையாளர்களும் Title VI-இன் கீழ் பாதுகாக்கப்படுகிறார்கள். Title VI-இன் கீழ் தனக்குள்ள ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதிலும், குறைந்த வருமானம் உள்ளோர், வெள்ளையரல்லாதோர், குறைந்த ஆங்கிலத் திறன் உள்ளவர்கள் ஆகியோருக்கும் தனது சேவைகளும் நடவடிக்கைகளும் அர்த்தமுள்ள வகையில் கிடைப்பதை உறுதிசெய்வதிலும் SamTrans பற்றுறுதி கொண்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள எல்லோரையும் Title VI பாதுகாக்கிறது, அவர்கள் அமெரிக்கப் பிரஜையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்.

## SamTrans ரைடர்ஸ் மற்றும் சமூகங்களுக்கு (SamTrans Riders and Communities) Title VI எப்படிப் பலனளிக்கிறது?

SamTrans தனது வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய முதன்மை மொழியில் அர்த்தமுள்ள உதவியை அளிக்கிறது. வாடிக்கையாளர்கள் பல மொழிகளில் உதவி கோர 1-800-660-4287 என்ற எண்ணை அழைக்கலாம்.

SamTrans சந்திப்புகளில் இலவச மொழி உதவியும் உள்ளது.

நேரடி மொழிபெயர்ப்பு அல்லது எழுத்துப்பூர்வமான பொருட்களைக் கோருவதாக இருந்தால் தயவுசெய்து குறைந்தது 72 மணிநேரத்திற்கு முன்னதாக TitleVI@samtrans.com என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளுங்கள்.